

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## வயதாகும் விருத்தாப்பியம், அவரது ஜனத்திற்கு மகிழ்ச்சியே!

**வ**யதாகிப்போகும் ‘விருத்தாப்பியம்’ நமக்கு சஞ்சலம் இல்லை! ஏனெனில், இயேசுவை சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்ட வாலிப காலம் தொடங்கி..... வயோதிப காலம் வரை நடத்தி, நம்மோடு பழகிய இந்த தேவன் “நம் தேவன்” என்ற ஆசீர்வாதமான உறவுக்குள் கொண்டு வந்து விடுகிறார்! (சங்.48:14).

அவர் ‘என்றென்றைக்கும்’ உள்ள நம் தேவன்! மரணபரியந்தமும் கூடவே நின்று நம்மை நடத்தி, அவரோடு ‘என்றென்றைக்கும்’ வாழும் பாக்கியத்தை தருகிறார்!! (சங்.48:14). ஆகவேதான், தேவனால் நடத்தப்படும் பாக்கியம் பெற்றவர்கள், தங்கள் விருத்தாப்பிய காலங்களில் இன்னமும் அதிக மகிழ்ச்சியே அடைவார்கள்! அல்லேலூயா.

*-tr*

பெட்டகம் 20 | ஜுன் 2018 | பரல்கள் 6



## பரத்தின் அதிகாரமே, "ராஜ பாதை" நடத்தும்!

"நீ எங்கேயிருந்து வந்தவன்?" என்றும் "உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரம் உண்டு....." என்றும் கூறியதைக் கேட்ட இயேசு "பரத்திலிருந்து உமக்கு கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது!" என கெம்பீரமாய் உரைத்தார்! (யோவான்.19:9-11).

இந்த உலகத்தைத் தங்கள் ராஜ்யமாய் கொண்டவர்கள், இவ்வுலக அதிகாரங்களுக்கே நேரடியாக கீழ்ப்பட்டிருக்கிறார்கள்! அதைத்தான் கவர்னர் பிலாத்தும் சரியாய் கூறினார்! ஆனால் இயேசுவோ "என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என அறிவித்து, **தன் மீது உடனடியான அதிகாரம் பரத்திலிருந்துதான் முதலாவது வரவேண்டும்...... அதன் பின்புதான், கவர்னராகிய** உம்மிடம் அது வரமுடியும்! என ஆணித்தரமாய் உரைத்து "தான் எங்கேயிருந்து வந்தவர்" என்பதை இவ்வுலக ராஜ்ய கவர்னர் விளங்கும்படி சாட்சி உரைத்தார்.

"நான் எங்கேயிருந்து வந்தேன் என்றும், எங்கே போகிறேனென்றும் அறிந்திருக்கிறேன்" (யோவான்.8:14) என்ற இயேசுவின் சாட்சியை ஆணித்தரமாய், தங்கள் ஜீவியத்திலும், தங்கள் ஊழியத்திலும் கூறுபவர்களே, இயேசு காட்டிய பாதையில், அவரைப்போலவே கெம்பீரமாய் பின்பற்றிட முடியும்!

*-Ed*


**2018 'பரலோக பொக்கிஷங்கள்'**

வருட சந்தா ரூ.**140.00** **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**120.00**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch

**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150

(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)


**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**

**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**


கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்

207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India

Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306

Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com

## ‘பரிசுத்தாவியின் ஆசீர்வாதமே’ நமது செல்வம்!

*பழைய உடன்படிக்கையின் கீழ், ஜனங்கள் இந்த பூமிக்குரியவைகளை மாத்திரமே தேடி, அதை ஏராளமாய் பெற்றுக்கொண்டார்கள். அநேகம் பிள்ளைகள்! அதிகமான சொத்துக்கள்! ஏராளமான பணங்கள்! எதிரிகளிடமிருந்து ஜெயம்! இந்த பூமிக்குரிய கனம், பதவி! போன்றவைகளேயாகும். ஆனால் புதியஉடன்படிக்கையின்கீழ் நாமோ,* **ஆவிக்குரிய ஆசீர்வாதங் களைத் தேடுகிறோம்.** *ஆவிக்குரிய பிள்ளைகள்! ஆவிக்குரிய சம்பத்துக்கள்! ஆவிக்குரிய கனம்! பெலிஸ்தியர்களையோ அல்லது எந்த மனுஷனையோ வெல்வது அல்ல..... சாத்தானையும், மாம்சத்தையும் வென்றிடும் ஆவிக்குரிய ஜெயங்கள்! ஆகியவைகளேயாகும். நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு அவசியமான சுகம், பணம் போன்ற பூமிக்குரிய தேவைகளை தேவனே நம்மோடு சேர்க்கிறார். பணம் நம்மை அழித்துவிடும் என அவர் அறிந்திருக்கிறபடியால் ‘நமக்கு எவ்வளவு பணம் தேவையோ’அதை நமக்குத் தருகிறார். பழைய உடன்படிக்கையின்கீழ், சில ஜனங்களை தேவன் கோடீஸ்வரர்களாய் கூட மாற்றி இருக்க முடியும்! ஆனால், அதுபோன்ற செயலை, இன்று அவர் நமக்குச் செய்வதில்லை. ஏனென்றால், அப்படியொரு உலக ஆசீர்வாதங்கள், நாம் மேலானவைகளைத் தேடுவதற்கு தடையாக மாறி, முடிவில் நம்மை அழித்துவிட முடியும்! என்ற காரணமேயாகும்!*

*அநேக விசுவாசிகள், பழையஉடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் உள்ள வித்தியாசத்தை இன்னமும் அறிந்து கொள்ளவில்லை. ஆகவேதான், பழைய உடன்படிக்கையின் கீழ்உள்ள ஜனங்களுக்கு தேவன் வாக்குதத்தம் செய்தவைகளை, இவர்கள் ‘இன்னமும் தொடர்ந்து’ பின் சென்று தேடுகிறார்கள்! வேதாகமத்திலிருந்து ஐசுவரியத்தின் செழிப்பை பிரசங்கிக் கிறவர்கள், தங்கள் பிரசங்கத்தில் ‘அவைகளை முழுமையாய் பிரசங்கிக்காமல்’ வெகு கவனமாய் பொறுக்கி எடுத்தே பிரசங்கிக்கிறார்கள்.*

**உதாரணமாய், பழைய உடன்படிக்கையின் ஆசீர்வாதம், தேவன் இஸ்ரவேலர்களை ஏராளமான பணங்களைக் கொடுத்து ஆசீர்வதிப்பார் என்பது போலவே, ஏராளமான பிள்ளைகளையும் தருவார்! என்றே உபாகமம்.28:11-ம் வசனத்தில் வாசிக்கிறோம். ஆனால் இந்த பிரசங்கிகளோ, இந்த இரண்டாவது பகுதியில் வரும் ஆசீர்வாதத்தை வலியுறுத்திக் கூறுவதில்லை! ஆகவே, இந்த பிரசங்கிகளிடம் 'நேர்மை இல்லை' என்பதையே இது நிரூபிக்கிறது!**

*ஆகவேதான், உலகத்தின் செழிப்பை வைத்து தேவன் தம்முடைய ஜனங்களை ஆசீர்வதிக்கிறார் என பிரசங்கிப்பவர்களில் ஒருவர்கூட "தேவன் தம் ஜனங்களை ஏராளமான பிள்ளைகளைத் தந்து" ஆசீர்வதிக்கிறார் என பிரசங்கித்ததாக நாம் கேட்டதேயில்லை. இந்த ஒரே ஒரு உண்மைகூட, இந்த பிரசங்கிகள் "***பழைய உடன்படிக்கையின் வஞ்சகர்கள்***" என்பதை நிரூபிப்பதாயிருக்கிறது. இவர்கள் உலக ஆசீர்வாதங்களை பிரசங்கிப்பதற்கு காரணம், தங்கள் சபையிலுள்ள ஏழை ஜனங்களிடமிருந்து காணிக்கையாக பெற்ற ஏராளமான ஆஸ்திகளை நியாயப்படுத்துவதற்கென்றே, எந்த பொருத்தமும் இல்லாமல், பழைய ஏற்பாட்டு வசனத்தை கோடிட்டு காட்டுகிறார்கள். இதுபோன்ற, வஞ்சகப் பிரசங்கிகளால் வஞ்சிக்கப்படாதிருங்கள்!*

*1:3-ம் வசனத்தில் குறிப்பிடப்பட்ட "ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை" "***பரிசுத்தாவியின் ஆசீர்வாதம்***" எனவும் மொழி பெயர்த்திட முடியும்:*

**பரிசுத்தாவியின் சகல ஆசீர்வாதங்களாலும், கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை முன்கூட்டியே ஆசீர்வதித்திருக்கிறார்! இந்த ஆசீர்வாதத்தை இயேசுவின் நாமத்தில் நாம் சுதந்தரித்துக் கொள்ள மாத்திரமே வேண்டும்!**

*ஒரு பிச்சை எடுக்கும் பெண், வீதியில் அமர்ந்து பிச்சை எடுப்பதாக கற்பனை செய்து பாருங்கள். அப்போது அங்கு வந்த ஐசுவரியமுள்ள ஒரு இளவரசன், அவளை திருமணம் செய்ய முடிவுசெய்து, அவளுடைய வங்கிக் கணக்கில், பல கோடி ரூபாய்களை வரவு செய்தான். அந்த கணக்கிலிருந்து, அவள் எந்த நேரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் அவள் விரும்புகிறபடி பெற்றுக்கொள்ள முடியும். அவள், எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி! ஒரு காலத்தில், தன் தகர டப்பாவில் சில காசுகளே வைத்திருந்த ஏழை பெண்மணி! ஆனால் இப்போதோ, அவள் பகட்டான உடையில் இராஜரீக வாழ்க்கை வாழ்கிறாள். வங்கியிலிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் பணத்தை அவள் எடுத்து கொள்ள முடியும். ஏனெனில், அந்த இளவரசன் கையொப்பமிட்ட ஏராளமான காசோலைகள் அவளிடம் இருந்தது! 'இந்த கற்பனையை' ஆவிக்குரிய ரீதியாக நம்மை வைத்து கூறிட*

முடியும். இன்று நாம், பரலோக வங்கிக்குச் சென்று, பரிசுத்தாவியின் ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்! ஏனென்றால் 'கிறிஸ்துவின் நாமத்தில்' அதாவது, அவரது பெயரால் கையொப்பமிட்டு, அவை அனைத்தும் நமக்குத் தரப்பட்ட சம்பத்துகள்!!

நாம் மாத்திரம் 'அவரோடு கொண்ட மணவாள உறவில் நிலைத்திருந்தால்' கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலுள்ள சகலமும் நமக்குச் சொந்தமாகி விடும்!

**நாம் அவரிடம் "ஆண்டவரே, நான் உம்முடைய மணவாட்டியாய், இந்த பூமியில் உள்ள ஜீவநாட்களெல்லாம் உமக்கு உண்மையாக இருக்க விரும்புகிறேன்" என அர்ப்பணித்து கூற முடியுமென்றால்....**

அப்போது பரிசுத்தாவியின் ஒவ்வொரு ஆசீர்வாதமும் நமக்கு சொந்தமாகிவிடும். நாம் தேவனிடம் சென்று, அவரது ஆசீர்வாதங்கள் யாதொன்றிற்கும் தகுதியுள்ளவர்களென்று தேவனை உணர வைத்து முயற்சித்திட அவசியமேயில்லை.... ஏனென்றால், அவைகளில் ஒன்றிற்கு கூட, நாம் தகுதியானவர்கள் அல்ல! அந்த ஏழைப்பெண், அவள் இலவசமாய் பெற்ற சம்பத்துகளுக்கு, தான் தகுதியுள்ளவள் என்பதாக கற்பனைகூட செய்து பார்க்க முடியுமா? ஒருக்காலும் இல்லை! நாம் பெற்றுக் கொண்ட அனைத்தும் தேவனுடைய முழு **இரக்கத்தாலும், கிருபையாலும்** பெற்றுக் கொண்டோம். அவ்வாறாகவே, நாம் பரலோகத்திலுள்ள ஒவ்வொன்றையும் பெற்றுக் கொள்ள முடியும். ஏனென்றால், அவை அனைத்தும், நமக்கு 'கிறிஸ்துவுக்குள்' இலவசமாய் அருளப்பட்டிருக்கிறது. அவைகளை நாம் நம்முடைய உபவாசத்தாலோ அல்லது நம்முடைய ஜெபத்தாலோ கூட சம்பாதிக்க இயலாது! பரிசுத்தாவியின் ஆசீர்வாதங்களை இன்று அநேகர் பெற்றுகொள்ளவில்லை. அதுஏனென்றால், அவைகளைத் தாங்களாக முயற்சித்து சம்பாதித்து விடலாம் என எண்ணுகிறார்கள்! அவ்வாறு, நாம் ஒருபோதும் பெற்றுக் கொள்ளவே முடியாது. நாமோ, அவை அனைத்தையும் **கிறிஸ்துவின் தகுதியை முன் வைத்து** மாத்திரமே பெற்றுகொள்ள வேண்டும்!

இந்தப் பாடத்தை கர்த்தரே எனக்கு கற்றுக்கொடுத்தார். ஒரு சமயம், என்னுடைய இக்கால தேவைக்காக நான் கர்த்தரிடம் ஜெபித்தபோது "ஆண்டவரே, நான் உமக்கு பல வருடங்களாய் ஊழியம் செய்கிறேன்! ஆகவே, இந்த உதவியை எனக்கு தயவாய் செய்திட வேண்டும்" என ஜெபித்தேன். அதற்கு ஆண்டவர் "நீ உன்னுடைய **சொந்த நாமத்தில்** பிரதி உபகாரம் தேடிவருகிறபடியால், நீ கேட்கும் உதவியை செய்திட மாட்டேன்" என கூறி விட்டார். நான்

“**இயேசுவின் நாமத்தில்** ஜெபித்திடும்” அர்த்தத்தை, அந்த நாளில் கற்றுக் கொண்டேன்!

இப்போதுதான் மனந்திரும்பிய விசுவாசியும், பல வருடங்களுக்கு முன்பு 1959-ம் வருடம் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட நானும், ஆகிய இருவருமே “இயேசு கிறிஸ்துவைச் சார்ந்த தகுதியின்படி மாத்திரமே” தேவனிடத்தில் கிட்டிச்சேர முடியும் என்ற உண்மையை விளங்கிக் கொண்டேன். ஒருவன் “பரலோக வங்கிக்கு” இயேசு கிறிஸ்து கையெழுத்திட்ட காசோலையை கொண்டே வரமுடியும்! அவ்வாறு, நானும்கூட **இயேசு கிறிஸ்துவின் கையெழுத்திட்ட** காசோலையோடு மாத்திரமே பரலோக வங்கிக்குச் செல்ல முடியும். அதற்கு பதிலாக, நான் தேவனிடம், ‘உமக்கு பல வருடங்கள் உண்மையுள்ளவனாய் இருந்திருக்கிறேன்’ எனக் கூறுவேனென்றால், **நான் கையெழுத்திட்ட** காசோலையோடு பரலோக வங்கிக்கு செல்கிறவனாய் இருக்கிறேன். என் கையெழுத்தைப் பார்க்கும் பரலோக வங்கி, என் காசோலையை புறக்கணித்து விடும்!

இன்று நம்முடைய அநேக ஜெபங்கள் பதிலளிக்கப்படாததற்கு, இதுவே காரணமாயிருக்கிறது. இவ்வித நிலை இயேசுவின் நாமத்தில் நாம் போகாதிருப்பதையே காட்டுகிறது. நம் சொந்த பெயரை முன் வைத்தே போகிறோம்! நான் தேவனுக்கு ஏராளமான தியாக ஊழியம் செய்தபடியால், ‘எனக்கு அவர் செவிகொடுக்க வேண்டும்’ என்ற சிந்தை உடையவர்களாய் இருக்கிறோம்.

நாம் 70 ஆண்டுகளாய் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் ஜீவித்தாலும், நாம் ஆண்டவருக்கு முன்பாக வரவேண்டுமென்றால் ‘புதிதாக இரட்சிக்கப்பட்ட ஒருவன்’ **இயேசுவின் நாமத்தில்** தேவனிடத்திற்கு வரும் ‘அதே அடிப்படையில்தான்’ வரவேண்டும். இந்த வெளிப்பாட்டை தந்த தேவனுக்கு நன்றி கூறுகிறேன். ஏனென்றால், அந்த நாளுக்குப் பிறகு நான் ஒருமுறை கூட என்னுடைய பெயரை கையெழுத்திட்ட காசோலையை தேவனிடம் கொண்டு செல்லவில்லை. அவ்வாறு செய்திட நான் சோதிக்கப்பட்ட போதெல்லாம் “இந்த காசோலைக்குப் பணம் வராது! இயேசுவின் நாமத்தை வைத்தே, அவருடைய தகுதியை மாத்திரம் முன்வைத்தே நான் தேவனிடம் செல்லுவேன்” என, எனக்கு நானே கூறிக் கொண்டேன். ஆகவே **பரிசுத்தாவியின் ஒவ்வொரு ஆசீர்வாதமும்,** ‘கிறிஸ்துவுக்குள்’ உன்னதங்களிலே நமக்கு சொந்தமாயிருக்கிறது என்ற சத்தியத்தை நாம் இன்று அறிந்துகொள்வோமாக!

– சகரியா பூணன்

## தனது பிரியமானவர்களின் 'சுயத்தை' முற்றிலும் அழிக்கிறார்!

**தே**வன் நடத்திய பாதைகள் 'புகழுக்குரியதாய்' இருப்பதைக் கண்டேன். அந்தப் பாதை, மனுஷர் விரும்பும் கண்ணோட்டமாய் இல்லை என்பதையும் உணர்ந்தேன்! அவர் தெரிந்து கொண்ட ஒருவனை, அவர் நடத்தும் பாதை இருளாகவும், மரணத்திற்கு ஏதுவாகவும் இருந்தது. அவனை அல்லது அவனுடைய முழுமையையும் அழித்து நடத்துவதற்கு தேவனைத் தவிர இந்த உலகத்தில் 'வேறொரு கண்டெக்டர் அல்லது நடத்துனர்' இவ்வுலகில் எங்குமில்லை. அவர் தமது பெரிதான இரக்கத்தினால் என்னை இரட்சித்து, அவருடைய கரத்தினால், கரடான பாதைகளில் என்னை நடத்தியதைக் கண்டப் பிறகு "**அவர் என் சுய – ஜீவியத்தை முற்றிலும் அழித்துவிட**" **கிரியைச் செய்கிறார்** என்பதை தெளிவாய் புரிந்துக் கொண்டேன். 'அழிப்பது' என்ற வார்த்தையை வேதம் பல்வேறு விதமாய் கூறுகிறது. அந்தந்த இடத்திற்கு மாத்திரமே 'அழிப்பது' என்ற வார்த்தை பொருந்தும். இயேசு கூறிய வார்த்தையாகிய "இரட்சிக்க வந்தேன் அழிப்பதற்கு அல்ல" என்ற வாக்கியங்களை நாம் மாற்றிவிடக் கூடாது. நம் இரட்சகர் இடிக்கப்பட்டதை கட்டுவதற்கு மகிழ்ச்சி அடைகிறார்! அதுபோலவே, கட்டப்பட்டதை இடிக்கவும் செய்கிறார்! தேவபக்திக்கு ஏதுவான இந்த அறிவை நாம் எல்லோரும் உணர்ந்திருக்க வேண்டும்.

மனுஷன் தன்னுடைய முழு முயற்சி கொண்டு கட்டிவைத்த ஆலயத்தை தேவன் **அழிப்பதும்,** கையினால் கட்டப்படாத நித்திய பரலோக சபையை **கட்டுவதும்** தேவனுக்கே உரிய அற்புதமாகும். தேவனுடைய அளவிட முடியாத ஞானத்தின் இரகசியங்கள் அவருக்கேயன்றி, வேறெந்த மனிதனுக்கும் விளங்குவதில்லை. 'மனுஷன்' சில நாட்களுக்காக தோன்றுபவன்! தன்னுடைய முயற்சிகளில் அவன் பிரவேசித்து, அதற்கு அவன் வேலி அடைத்து, அதை 'நித்தியம் என எண்ணி' காத்திட முயற்சிக்கிறான்!

> **கர்த்தருடைய மனதை அறிந்தவன் யார்? யார் அவருக்கு ஆலோசனை தருவான்? ஒருவன் 'எல்லாவற்றிற்கும்' மரித்து, தன் முழு சுயத்தையும் இழக்கும்போது மாத்திரமே "தேவனுடைய ஞானத்தை" அறிந்து கொள்ள முடியும்!**

என் அரண்மனை வீட்டில் நடந்த ஒரு நிகழ்ச்சியில், என் சகோதரன் 'முகாந்திரம் ஏதுமின்றி' என் மீது பகிரங்கமான தன் பகையைக் காட்டினான். **'ஓர்லியான்ஸ்'** நகரில் அவனுக்கு திருமணம்

*ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. என் கணவரும் அந்த திருமணத்திற்குச் செல்ல மகிழ்ச்சியுடன் ஆயத்தமாயிருந்தார். ஓர்லியான்ஸ்க்கு செல்லும் பாதை, சாரட் குதிரை வண்டி செல்ல கடினமானதேயாகும். என் கணவரின் சரீர சுகமோ நல்ல நிலையில் இல்லை. நாங்கள் பயணம் சென்ற பாதையில் ஏராளமான பனி கொட்டியிருந்தது. ஆகிலும், கஷ்டமான பிரயாணத்தில் 'ஓர்லியான்ஸ்' வந்து சேர்ந்தோம். என் சகோதரன் என் மீது வைத்திருந்த பகையோ, சற்றும் மாறாமலே இருந்தது. ஓர்லியான்ஸ் வந்தபோது, என் சகோதரன் என் கணவரிடம் மிகவும் முரட்டுத்தனமாய் நடந்து கொண்டான். இந்த முறை, என் கணவர் அவனிடம் அதிக ஜாக்கிரதையான கண்ணியத்தோடு பேசினார். அப்படியிருந்தும், என் சகோதரனோ அவ்வப்போது என் கணவரிடம் வந்து தேவையில்லாத வாக்குவாதங்கள் செய்தான்.* **என்மீது கொண்ட வெறுப்பை,** *என் கணவர் மீது அவன் பிரதிபலித்ததைக் கண்டேன். ஓர்லியான்ஸில் நடந்த அந்த திருமண விழாவில், நான் அதிகமாய் மதிப்பு வைத்திருந்த ஒரு பக்தியுள்ள நபரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. என்னுடைய ஆவிக்குரிய உற்சாகத்தில் 'ஆழமான ஆவிக்குரிய காரியங்களை' ஏராளமாய் அவரிடம் பகிர்ந்துக் கொண்டேன். ஒரு நல்ல ஆவிக்குரிய பரிசுத்தவானோடு சிறந்த பக்திவிருத்திக்கு ஏதுவாய் நான் சம்பாஷித்ததாக எண்ணிக் கொண்டேன்! ஆனால் நான் எண்ணியது உண்மையாய் இருக்கவில்லை. நான் எண்ணியதற்கு மாறாக 'அந்த மதிப்பிற்குரிய நபர்' என்மீது பொறாமை கொண்டு, ஆத்திரமான வார்த்தைகளையும் கூறினார்! நான் அதிர்ச்சி அடைந்தாலும், ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக்கொண்டேன். ஆம், இயற்கையான என்னுடைய திறனில் பேசியதை 'கிருபை என' நான் தவறாய் மதிப்பிட்டு விட்டேன்.*

**நாம் தேவனிடமிருந்து மாத்திரமே தூண்டுதல் பெற்று பேச வேண்டுமென்றால், ஒருவன் தன் சுயத்திற்கு முற்றிலுமாய் மரித்திருக்க வேண்டும்! இப்போது என்னுடைய மனது, தேவனோடு அமைதி கண்டது!**

*ஓர்லியான்ஸில் நான் கற்றுக்கொண்ட பாடங்களோடு, எங்கள் அரண்மனை வீட்டிற்கு சாரட் வண்டியில் திரும்பி வந்தோம். ரஸ்தாவின் கடினப் பாதை எங்களை மீண்டும் பயமுறுத்துவதாகவே இருந்தது. சாரட் வண்டி, அதில் செல்ல முடியாமல் திணறியது. பாதையின் கடினம் 'என்னைக் குறித்த' யாதொரு சிந்தையும் கொண்டு வரமுடியவில்லை. என் முழு சிந்தையும் என் கணவரைப் பற்றியே இருந்தது! திடீரென்று ஒரு பெரிய பள்ளத்தில் சாரட் வண்டி இறங்கி ஓடியபோது, சாரட் வண்டி கவிழ்ந்து விடும் நிலையில் சாய்ந்தது.*

பீதியடைந்த என் கணவரை நான் பார்த்து "பயப்படாதீர்கள்! நான் இருக்கும் இருக்கையின் பகுதியில்தான் சாரட் சாய்ந்து செல்லுகிறது! அது உங்களுக்கு எந்த சேதமும் ஏற்படுத்தாது" எனக் கூறி திடப்படுத்தினேன். ஒரு வேளை இந்த ஆழமான பள்ளத்தின் பாதையில் நாங்கள் எல்லோரும் கவிழ்ந்து மரித்துப் போனாலும், என் இருதயமோ ஸ்திரமாகவும் திடமாகவும் இருந்திருக்கும். இந்த ரஸ்தாவின் கடினம், என்னை சிறிதும் பாதித்திட அனுமதித்திருக்க மாட்டேன்! ஏனென்றால் **என் உள்ளத்தை ஆட்கொண்டிருந்த சமாதானம்** எல்லா சூழ்நிலை களுக்கும் மேலாய் இருந்தபடியால், சிறிதுகூட நான் அசைக்கப் படவில்லை. என்னை ஆட்கொண்ட சமாதானம் 'புத்திக்கெட்டாத' தேவ சமாதானமாய் இருந்தது!

இவ்வாறெல்லாம் நான் சென்ற கடின சூழ்நிலைகள், என் இருதயத்தை அதிக பெலன் கொள்ளச் செய்ததைக் கண்டேன். என் அரண்மனை வீட்டிற்கு வந்து சேர்ந்ததும், என் கண்களுக்கு முன்பாக ஒரு உண்மை புலனாகியது! 'குறிப்பாக' என்மீது முகாந்திரமின்றி ஆத்திரம் கொண்ட **என் சகோதரனின் செயல்..... என் மீது அல்ல, தேவன் மீதே அதிக இழிவாய் நடந்து கொண்டான்** எனவும்! அவன் ஒரு மனந்திரும்பிய விசுவாசியாய் இருந்தாலும், தான் செய்வது இன்னதென்று அறியாமல், தேவனுடைய சத்துருவாகிய சாத்தானுக்கு கைகொடுத்துவிட்டான்! என்ற உண்மையையும் அறிந்து, ஓர் தெளிந்த தெய்வ பயத்தோடு என் அரண்மனைக்கு வந்து சேர்ந்தேன்!

– மேடம் குயான்

---

## 'அவர் சமூகம் கண்டவனே' ஆவிக்குரிய அதிகாரம் பெற்றவன்!

இந்த உலகம் "தேவனை அறிகிற அறிவு இல்லாமல்" அழிந்து கொண்டிருக்கிறது. அதுபோலவே இன்றுள்ள சபைகள் "தேவ பிரசன்னத்தை இழந்து"தவிக்கிறது. நாம் சந்திக்கும் ஆவிக்குரிய எவ்வித நோய்களையும் 'ஆவிக்குரிய அனுபவத்தில்' நாம் பிரவேசிக்கும் தேவனுடைய சமூகமே ஓர் நல்ல சுகத்தை கொண்டு வர முடியும். **நாம் தேவனிலும், தேவன் நம்மிலும் இருக்கின்ற தொடர்ச்சியான உணர்வே ஆவிக்குரிய சுகத்தை கொண்டு வரும்.** தேவனுடைய சமூகத்தில் பிரவேசித்திருக்கும் அனுபவம் மாத்திரமே கோணலான குழியில் விழுவதிலிருந்து நம்மைத் தூக்கி எடுத்து, நம் இருதயங்களை விசாலமாக்கித் தருகிறது. அன்று வனாந்தரத்திலுள்ள முட்செடியை பற்றிகொண்ட அக்கினி, அங்குள்ள பூச்சிகளையும் வண்டுகளையும் மற்றுமுள்ள கிருமிகளையும் எரித்து விடுவதைப்

போல, இன்று அவருடைய சமூகம் நம் ஜீவியத்திலுள்ள 'சகல அழுக்குகளையும்' எரித்து விட முடியும்!

"உடைபடுவதற்குத் தகுதியான" இருதயங்கள் யாருக்கு இருக்கும்? தேவனாகிய கர்த்தர் மீதுகொண்ட அன்பினால் நிறைந்து, அவருடைய சமூகத்தை மலர்ந்த கண்களால் கண்டவர்கள் மாத்திரமே அந்த ஒப்பற்ற நிலையை அடைவார்கள். **நொறுங்குண்ட இருதயம் கொண்ட மாந்தர்கள் மாத்திரமே சபையில் தரம் கொண்டவர்கள்!** அவர்கள் பெற்றிருக்கும் அந்த உயர்ந்த தரம், சாதாரண மனுஷீகம் கொண்டவர்களால் அறியப்படவோ அல்லது விளங்கிக் கொள்ளவோ முடியாது. அவர்களின் வழக்கமான பேச்சுகள்கூட 'ஆவிக்குரிய அதிகாரம்' கொண்டதாய் இருக்கும். இவர்களே, ஆம், இவர்களே தேவனுடைய சமூகத்தை கண்டு 'தாங்கள் கண்டதை' மற்றவர்களுக்கு அறிவிப்பார்கள். இவர்களை மாத்திரமே 'தீர்க்கதரிசிகள்' என நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**மற்ற அனைவருமே 'வேதபாரகர்களாய்' மாத்திரமே தேங்கி நிற்பார்கள்! யார் இவர்கள்? 'தாங்கள் வாசித்து படித்ததை' மற்றவர்களுக்கு போதிப்பார்கள்! யார் தீர்க்கதரிசி? 'தான் கண்டதை' பிறருக்கு அறிவிப்பவர்கள்!**

இந்த இரு வகையாரிடம் காணும் வித்தியாசம், நாம் எண்ணுகிறதுபோல சாதாரணமானது அல்ல! வாசித்து விளங்கிக் கொண்ட வேதபாரகனுக்கும்! 'கண்ணார கண்ட' தீர்க்கதரிசிக்கும் உள்ள வித்தியாசம் "சமுத்திர ஆழத்திற்குரிய" அவ்வளவு பெரிய வித்தியாசமாகும். இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில், வாசித்து கற்றுக்கொண்ட வேதபாரகர்களே, வழிந்தோடி கிடக்கிறார்கள். 'எழுத்தை பற்றிக்கொண்டு' இவர்கள் எழுப்பும் சத்தம் பெரிதாயிருக் கிறது! ஆனால் இன்று சபை வாஞ்சையுடன் காத்திருப்பதெல்லாம், மாம்ச திரையை ஊடுருவிச்சென்று, மகா பரிசுத்தஸ்தலத்தை தங்களின் உள்ளான கண்களால் "தேவனுடைய அதிசயத்தை" உற்று நோக்கிக் கண்டவர்கள்! இவ்வாறு காணும் பாக்கியம் கொஞ்ச பேர்களுக்கு மாத்திரமல்ல..... மாம்ச திரையின் வழியாய் ஊடுருவச் சென்று பரிசுத்தரின் பிரசன்னத்தைக் கண்டு "உணர்வுள்ள ஜீவிய அனுபவம் பெரும் பாக்கியம்" தேவனுடைய பிள்ளையாகிய ஒவ்வொருவருக்கும் அருளப்பட்ட சிலாக்கியமேயாகும்!

**இயேசு கொண்டிருந்த மாம்ச திரை கிழியுண்டு அகற்றப்பட்ட நிலையில், தேவனுடைய சமூகத்திற்குள் பிரவேசிக்க 'ஒரு தடை கூட' இப்போது தேவனுடைய பட்சத்தில் இல்லை! பின் ஏன் நாம் இன்னமும், பிரவேசிக்காமல் தேங்கி நிற்கிறோம்?**

நாம் இன்னமும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே நின்று கொண்டு 'உள்ளிருக்கும் தேவனை' காணும்படி வெளியில் நின்று தாமதிக்க, ஏன் சம்மதித்து விட்டோம்? இப்போது மணவாளனின் குரல் "நான் உன் முகத்தை, காணட்டும்! உன் குரலை நான் கேட்கட்டும்! உன் சத்தம் எனக்கு மதுரமும், உன் முகமே எனக்கு வசீகரமாயிருக்கிறது" என அழைக்கும் குரலைக் கேட்கிறோம். நம்மையே இவ்வாறு அழைக்கிறார் என நாம் உணருகிறோம்..... ஆனால் நாமோ, இன்னமும் அவருடைய சமூகத்திற்கு கிட்டிச் சேரவில்லை! வருடங்கள் கடந்துவிட்டதே! நாமும் வயதாகி விட்டோம்! ஆசரிப்பு கூடாரத்தின் வெளியிலேயே பல காலமாய் முடங்கிக் கிடக்கிறோம். நாம் உள்ளே பிரவேசிக்க முடியாமல் தடையாய் இருப்பது என்ன?:

நித்திய பொறுப்பிற்குரிய இந்த பரலோகத்தின் கேள்விக்கு நாம் எளிதாய் மூடி மறைக்கும் காரணம் "நாங்கள் குளிர்ந்து விட்டோம்" என்றே கூறுகிறார்கள். ஆனால் இருதயத்தின் இந்த குளிர்ந்த தன்மைக்கு பின்பாக மறைந்திருக்கும் ஒன்றை இவர்கள் ஏன் கூறுவதில்லை? உண்மையான அந்த தடை என்ன? **நம் இருதயத்தில் நாம் காணும் "ஓர் திரை"** அல்லவா? அன்று மோசேயின் காலத்தில் விலகாத அந்த முதல் திரையைப் போலவே, நம் இருதயத்திலும் அந்த திரை அப்படியே தொங்கி கொண்டிருக்கிறது. அந்த திரையே, வெளிச்சத்தின் கதவை மூடி! தேவனுடைய முகத்தை நம்மிடமிருந்து மறைக்கிறது! இந்த திரைதான் "மாம்சமாகிய வீழ்ச்சியடைந்த நம் சுபாவம், இன்னமும் பிழைத்து வாழ்வதை" நமக்கு காட்டுகிறதாயிருக்கிறது. அது நமக்குள் நியாயத்தீர்க்கப்படாமலும்! சிலுவையில் அறையப்படாமலும்! புறக்கணிக்கப்படாமலும்! இருக்கிறது. அந்த திரை, நம் சுய - ஜீவியத்தால் நெருக்கமாய் பின்னப்பட்ட 'அடர்த்தியான' திரையாய் இருக்கிறது!

**நமக்குள் இருக்கும் இந்த கேடான சுய - ஜீவியத்தை (Self - Life), நம்மில் பெரும்பாலோர் 'அவர்களுக்குள் இருப்பதாக' ஒத்துக்கொள்வது கூட இல்லை! ஏனெனில், அருவருக்கத்தகுந்த அந்த ஜீவியத்தைக் கண்டு, நாமே நமது அந்தரங்கத்தில் வெட்கமடைகிறோம்!**

இந்த காரணத்தினிமித்தமே, நாம் அவைகளை "சிலுவையில் அறையப்படும் நியாயத்தீர்ப்பிற்கு" இன்னமும் கொண்டு வரவில்லை. நமக்குள், நாம் காணும் இந்த திரை அப்படி ஒன்றும் இரகசியமில்லை! அதன் கேடான நிலையை அறிந்து கொள்ள முடியாத கடினமாயுமில்லை! நம் சொந்த இருதயத்திலிருக்கும் நமது சுய - ஜீவிய

*திரையை சற்று 'உற்றுப்பார்த்தாலே' காண முடியும். சுய - ஜீவியத்தின் பின்னலால் நெய்யப்பட்டு, இந்த திரை, தேவனை நமக்கு மறைத்திருப்பதை நாம் காண முடியும்! இந்த கொடிய செயலுக்கு பின்பாக 'பொல்லாத ஆவியாகிய சத்துரு' செயல்பட்டான் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது! தேவனை மறைத்திடும் தங்கள் சுய - ஜீவியத்தை காணாதபடியால், இன்று அனேகரிடத்தில், ஆவிக்குரிய ஜீவிய வளர்ச்சி, சீரும் சிறப்புமாய் இல்லாமல் தேங்கி கிடக்கிறது.*

*"சுயம்" மிக வலிமையான..... ஊடுருவி காண முடியாத திரையாய் இருக்கிறபடியால், தேவனுடைய முகத்தை நம்மிடமிருந்து மறைக்கிறது. வெறும் அறிவுரைகளை வைத்து அல்ல, ஆழமான ஆவிக்குரிய அனுபவமே இந்த திரையை அகற்றிட முடியும்.*

**"உங்கள் சுயம் சிலுவையில் அறையப்பட வேண்டும்" என்ற உபதேசத்தை வைத்து நாம் திருப்தி அடைவது தவறு! அநேக சமயங்களில் இந்த சிலுவையின் உபதேசம், சவுல் இராஜாவைப்போல, நாமும் பிரதிபலித்து "சிறந்த ஆடுகளையும் சிறந்த எருதுகளையும்" (நமக்கு பிரியமான சுயத்தை) விட்டு வைக்கும் நிலை ஏற்படுகிறது!**

*நாம் செய்ய வேண்டியதெல்லாம் "சிலுவையை அழைத்து, அது தன் வலிமையான மரணத்தின் கிரியை நமக்குள் நிகழ்த்தும்படி"* **முற்றிலும் நம்மை ஒப்புக்கொடுப்பதுதான்!** *நாமும், நம் சுய - பாவங்கள் நியாயந்தீர்க்கப்படும்படி சிலுவைக்கு முன் கொண்டு வரவேண்டும். நம் சொந்த ஜீவன் மரிப்பது சாதாரண விஷயமே அல்ல! நம் மாம்சத்திற்கு பிரியமானதும், நமக்கு எளிதான வாழ்க்கைக்கு கைகொடுத்ததுமான சுய - ஜீவியம் ஒழிக்கப்படுவது, அதிக வலி நிறைந்ததாகும்! ஆம், இந்த வலியைதான், சிலுவை இயேசுவுக்குத் தந்தது! அதே வலியை, சிலுவை விரும்பி வரும் ஒவ்வொரு மனிதனுக்கும் தந்தருளி, அவனை விடுதலை செய்கிறது! சிலுவை கடினமானது மாத்திரமல்ல, மரணத்தையே அவனுக்கு கொண்டு வரும்..... ஆனால், அது அளிக்கும் ஆவிக்குரிய செழிப்போ அதிசயமானது!*

*தன் மீது அறையப்பட்ட ஒருவனை, சிலுவை நிரந்தரமாய் வைத்திருப்பதில்லை. சிலுவையின் கிரியை முடிந்தவுடன், அதில் தொங்கியவன் செத்து விடுகிறான். அதன்பின்பு உயிர்த்தெழுதலும் வல்லமையும் வெளிப்படுகிறது!* **திரை விலகிய சந்தோஷத்தில் வலி மறக்கப்பட்டு போனது!** *இதுவே சிலுவை வழங்கும் உண்மையான ஆவிக்குரிய அனுபவம்..... ஆம், நாம் ஜீவனுள்ள தேவனின்*

*பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கும் மகா உன்னத ஆவிக்குரிய அனுபவம். இதுவே ஒரு மனிதனை 'ஆவிக்குரிய அதிகாரத்தில்' நிலை நிற்கச் செய்கிறது!*

*– A.W.டோசர்*

---

## 'தேவனே' தாகமுள்ளோரின் தாகம் தீர்க்கும் ஜீவநதி!

*'**ஆ**சையே' எல்லா துன்பத்திற்கும், துயரத்திற்கும் வேரா யிருக்கிறது என சிலர் கூறுகிறார்கள். இதை உண்மை என்று ஏற்றுக் கொள்வோமென்றால், '**எல்லா ஆசைகளையும்**' அழிப்பதே மெய்யான இரட்சிப்பு என நாம் கூறிவிடக்கூடும். அப்படியிருக்கு மென்றால் எத்தனையோ **நன்மையான விருப்பங்களையும்** அகற்றிவிட வேண்டும் என பொருளாகும். அப்படியானால், நித்தியத்திற்குரிய நமது ஏக்கம் மிகுந்த விருப்பமான 'தேவனை முகமுகமாய் சந்திப்போம்' என்ற இனிமையும், 'நித்திய பேரின்பத்திற்குள் நுழைவோம்' என்ற மகிழ்ச்சியான விருப்பமும் அகற்றப்பட வேண்டுமே!? ஒருவர் தாகமாயிருந்தால், "உன் தாகத்தைக் கொன்று விடு" என்று கூறாமல்.... அவருடைய தாகம் தீர்க்க தண்ணீர் கொடுத்து உதவுகிறோம்!*

**உயிர்தரும் தண்ணீரைத் தந்து ஒருவனுடைய தாகத்தை போக்காமல், 'தாகத்தை' விரட்டியடிக்கலாம் என எண்ணுவது..... 'ஜீவனையே' விரட்டியடிப்பதற்கு சமமாகும்.**

*இதன் விளைவு, மரணமாயிருக்கலாம்! அது இரட்சிப்பு அல்ல! "எனக்கு தண்ணீர் தேவை!" என்பதை வெளிப்படுத்தும் அறிகுறியே தாகமாகும். மேலும், இந்த தாகம், எங்கோ தண்ணீர் இருக்கிறது என்பதையும், அது தன் தாகத்தை போக்கி திருப்திப்படுத்தும் எனவும் காண்பிக்கிற "நம்பிக்கையின் அடையாளமாயும்" இருக்கிறது!*

*'தண்ணீர் தாகத்திற்கு' இணையாகவே, நம்முடைய ஆத்துமாவின் ஆழத்திலிருந்து ஏற்படும் தவிப்பும் கூட, எங்கோ 'ஆவிக்குரிய சமாதானம்' இருக்கிறது என்பதை உணர்த்தும் நம்பிக்கை அடையாளமாகவே இருக்கிறது! நம் நெஞ்சில் ஏற்படும் வறட்சி அல்லது தாகத்தை 'ஏதோ ஒன்று' திருப்தியாக்க முடியும் என்ற எதிர்பார்ப்பும், இந்த நம்பிக்கையில் அடங்கும்! தாகம் நிறைந்த நம் ஆத்துமா, சிருஷ்டி கர்த்தாவாகிய தேவனையே கண்டடைய வேண்டும். ஏனெனில் அவரே நமது ஆவிக்குரிய தாகத்திற்கு மூலகாரணமாயிருக்கிறார்.*

**இந்த உலகில் ஏற்படும் தாகத்தைக் கொண்ட மனிதன் தண்ணீரைக் குடித்ததும் பெற்றிடும் திருப்தியைவிட, தேவனிடமிருந்து பெற்றிடும் ஜீவத்தண்ணீர், விவரிக்க முடியாத நித்திய திருப்தியை கொடுக்க வல்லது!**

இவ்வாறு ஒருவனுடைய ஆத்தும விருப்பம் திருப்தியடைந்து விட்டால், அவன் பரலோகத்தையே கண்டடைந்து விட்டான் என்றே கூற வேண்டும்!

ஒரு தேசத்திலிருந்து புறப்பட்டு வரும் நதி, பல தேசங்களுக்கு பாய்ந்து சென்று, முடிவில் சமுத்திரத்தில் போய் கலந்து விடுகிறது. எத்தனையோ இளவரசர்களின் இராஜ்ஜியங்களுக்கும், இராஜாக்களின் பல குடியிருப்புகளுக்கும், இந்த நதி பாய்ந்து செல்லுகிறது. ஆகிலும், எந்த ஒரு தேசம் கூட, நதியை தங்களுக்கு மாத்திரம் சொந்தமாய் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. ஏனெனில் **ஊற்றுப் பிரவாகத்திலிருந்து** பொங்கி வரும் ஒரு நதி, உலகத்திலுள்ள எல்லா தேசங்களுக்கும் பொதுவானதாகும்! அது எங்கெல்லாம் பாய்ந்து செல்லுகிறதோ, அங்கெல்லாம் உள்ள அனைத்து மக்களின் தாகத்தையும் தீர்க்கிறது.

அதுபோலவே, ஜீவ நதி நீரோடையும், தேவனுடைய அன்பின் சமுத்திரத்திலிருந்து ஊற்றெடுத்து பாய்ந்தோடி, மீண்டும் மழையாய் பூமியில் பெய்து.... ஒரு நதியின் வாய்க்கால்கள் போல, தீர்க்கதரிசிகள் மூலமாகவும், பரிசுத்தர்கள் மூலமாகவும் அந்த ஜீவநதி பாய்ந்து சென்று, இந்த உலகத்தை நனைக்கிறது! இப்போது சம்பவிப்பது என்ன? **தாகம் கொண்ட ஆத்துமாக்களை தாகம் தீர்க்கிறது!** அதுபாய்ந்து செல்லும் இடமெல்லாம் ஆவிக்குரிய ஜீவியத்தின் ஐசுவரியத்தை வாரி வழங்குகிறது! சோர்வுற்ற மக்களை உயிர்ப்பிக்கிறது! பூமியின் கடையாந்தரங்கள் வரைக்கும் இந்த நதி பாய்ந்து, தேசங்களைச் செழிக்க வைக்கிறது!

இவ்வளவு மேன்மையான 'செழிப்புள்ள ஜீவியத்தை' வழங்கும் 'ஊற்றுக்கண்ணாகிய' தேவனை, தாகமுடன் தேடி வாழ்பவர்கள் மாத்திரமே, அவரைக் கண்டடைந்து 'ஜீவியத்தின் பரிபூரண அனுகூலத்தை' தாராளமாய் பெற்று வாழ்வார்கள்!

– சாது சுந்தர்சிங்

---

## "கிறிஸ்துவோடு இசைந்த அறிவை" இழப்பது பெருந்துயரம்!

**கி**றிஸ்துவைப்பற்றிய நமது அறிவு இரண்டு வகைப்படும். 1)கேள்வி அறிவு, 2) அனுபவ அறிவு என இருவகைப்படும். கேள்வி அறிவு அவசியம். கேள்வி அறிவில்லாமல், அனுபவ அறிவு வராது. விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி திருவசனப் போதனை யினால் வரும். கேள்வி அறிவுக்கும் அனுபவ அறிவுக்கும் எவ்வளவோ வித்தியாசம்! "**என் காதினால்** உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ **என் கண்** உம்மைக் காண்கிறது. ஆகையால் நான்

என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப் படுகிறேன்" என்று யோபு கூறினார். இந்த அனுபவ அறிவினால், அவர் கர்த்தரிடமிருந்து இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றார். அநேகர் கேள்வி அறிவிலேயே நின்று விடுகிறார்கள். ஆகையால் அவர்கள் **ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதல்** ஒன்றும் நிகழ்வதில்லை!

நமது சபைகளில், அநேகர் கேள்வி அறிவுக்காரராகவே இருக்கிறார்கள். அவர்கள் ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதல் இல்லை! தங்கள் ஜீவியத்தில் மாறுதலடையாதவர்கள், கிறிஸ்துவை அறிந்தவர்கள் அல்ல. கேள்வி அறிவுக்காரரைக் குறித்து யோவானும் பவுலும் சொல்வதைக் கேளுங்கள்: "அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை" *(1யோ.2:4)*. பவுல் சொல்லுகிறதென்ன? "அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோம் என்று அறிக்கை பண்ணுகிறார்கள், தங்கள் கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்! இவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ் செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள்" *(தீத்து.1:16)*.

மனுஷர் மூலமாகவும், புஸ்தகங்கள் மூலமாகவும், மாநாடுகள் (Conference) மூலமாகவும் கிறிஸ்துவைப்பற்றி நாம் அறிந்துகொள்வது நல்லது. ஆனால், நாம் "அவரை முகமுகமாய் சந்திக்காவிட்டால்" இந்தக் கேள்வி அறிவினால் நமக்குப் பிரயோஜனமில்லை! சமாரியா ஸ்திரீ ஊருக்குள் போய் கிறிஸ்துவைப்பற்றி அறிவித்தாள். ஊரார் அதைக் கேட்டு, கிறிஸ்துவை தங்களோடு இருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள்! **அங்கேதான், அவர் இன்னாரென்பது** அவர்களுக்கு வெளிப்பட்டது. அவர்கள் விசுவாசிகளாகியவுடன், அந்த ஸ்திரீயைப் பார்த்து: "அம்மா, நீ கிறிஸ்துவைப்பற்றி எங்களுக்கு அறிவித்தாய், ஆகிலும் உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்" என்றார்கள்! இதுவே அனுபவ அறிவு. அவர்களைப் போல் நமது சபையிலுள்ளவர்கள் தங்கள் போதகர்களைப் பார்த்து: "ஐயா, உங்கள் பிரசங்களுக்காக நன்றியாயிருக்கிறோம். ஆகிலும் உங்கள் போதனைகள் மூலமாய்....

**நாங்களே கிறிஸ்துவிடம் சென்று, அவரது இரட்சிப்பின் ஆசீர்வாதத்தைப் பெற்று ஜீவியத்தில் மாறுதலடைந்திருக்கிறோம்" என்று சொல்லக் கூடுமானால், அது எவ்வளவோ பாக்கியம்! இவ்வித அனுபவ ரீதியான கிறிஸ்தவர்கள், இன்றைய சபைகளில் 10% கூட இல்லாதிருப்பது துரதிருஷ்டம்!**

*தென்தேசத்து ராஜ ஸ்திரீ, இதற்குச் சிறந்த திருஷ்டாந்தமாயிருக்கிறாள். அவள் சாலமோனுடைய ஞானத்தைக் குறித்தும் ஐசுவரியத்தைக் குறித்தும் தன் தேசத்தில் கேள்விப்பட்டிருந்தாள்! அவைகளை அவள் நம்ப முடியவில்லை. இதன் உண்மையை அறியும்படி அவள் புறப்பட்டு, எருசலேம் சேர்ந்து சாலமோன் அரசனையும் அவனுக்குரிய காரியங்களையும்* **கண்டு பிரமிப்படைந்து**: *"ராஜாவே, நான் உம்மைக் குறித்து என் தேசத்தில் கேள்விப்பட்ட செய்தி மெய்யாயிற்று, நான் வந்து அவைகளை என் கண்களால் காணுமட்டும் அவைகளை நான் நம்பவில்லை. இவைகளில் பாதி கூடக் கேள்விப்படவில்லை. நான் கேள்விப்பட்டதைப் பார்க்கிலும் உமது ஞானமும் செல்வமும் அதிகம்!" என்று அரசனைப் போற்றினாள். தன் தேசத்திற்கு அவள் திரும்பினபின் சாலமோனைப் பற்றிச் சந்தேகத்தோடல்ல, முழு நிச்சயத்தோடே பிரஸ்தாபித்திருப்பாள்!*

**கேள்வி அறிவு சந்தேகமுள்ளது, அனுபவ அறிவு நிச்சயமுள்ளது! விசுவாசிக்கிறோம் விசுவாசிக்கிறோம் என்று விசுவாசப் பிரமாணத்தைக் காலமெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிற அவிசுவாசிகள் அநேகர். 'அவர்கள் கிறிஸ்துவைச் சந்திக்காதபடியால்' அவரைப்பற்றி அவர்களுக்கு நிச்சயமில்லை!**

*'நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன்' என்று பவுல் சொன்னதுபோல சொல்லக்கூடியவர்களே கிறிஸ்துவை அனுபவத்தில் அறிந்தவர்கள்! அந்த ராஜ ஸ்திரீயைப் போல, இயேசு மகாராஜனைச் சந்தித்து அவரோடு சம்பாஷிக்கிறவர்கள், தாங்கள் கேள்விப்பட்டதைப் பார்க்கிலும் அதிகமான அன்பையும், கிருபையையும் அவரில் கண்டு பிரமிப்பார்கள்! இவர்களே, அவரை ஊக்கத்தோடு பிரஸ்தாபிக்கும் அனுபவ சாட்சிகளாயிருக்கிறார்கள்!!*

*கேள்வி அறிவு ஒரு பக்கத்திற்குரியது! அனுபவ அறிவு இரண்டாவது பக்கத்திற்கும் உரியது! ஆகவேதான் அநேகர், கடைசி நாளில் புறக்கணிக்கப்படும்போது, தத்தளித்து திண்டாடுவார்கள்.* **இவர்கள் கிறிஸ்துவோடு நெருங்கிப் பழகினவர்கள் அல்ல.** *இவர்களுக்கு ஆராதனைகள் உண்டு! அப்பம் பிட்கவும் செய்தார்கள்! போதகர்கள் மூலமாய் கிறிஸ்துவைப்பற்றிய கேள்வி அறிவும், முழுமையாய் உண்டு! இவைகளைக் கேட்டதாலே தாங்கள் கிறிஸ்துவை அறிந்து கொண்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! இப்படிப்பட்டவர்களைப் பார்த்து ஆண்டவர் என்ன சொல்லுவார்?: 'அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள், நீங்கள் எவ்விடத்தாரோ, நான் ஒருக்காலும்* **உங்களை அறியேன்**' *என்பார்.*

**இவர்கள் கிறிஸ்துவைச் சொந்தமாக்கிப் பிழைக்காததால், அவர்கள் நம்பியிருந்த ஆராதனைகள், ஞானஸ்நானங்கள், இராப்போஜன பந்திகள், பண்டிகை ஆசரிப்புகள் யாவும் வீணாகிப் போயின! இவர்கள் தான், கேள்வி அறிவுக்காரர். இவர்கள், சபையில் நீண்ட காலம் இருந்தும் முடிவு எவ்வளவு பரிதாபம்!**

*எவ்வளவு ஏமாற்றம்! 'கிறிஸ்துவைத் தவிர' மற்றெல்லா ஆசரிப்புகளும் இவர்களுக்கு இருந்தும், அது அவர்களை ஆதரிக்கவில்லை.*

*அனுபவ அறிவில் இரு பக்கமும் உண்டு! 'நான் என் ஆடுகளை* **அறிந்தும்** *என் ஆடுகளால்* **அறியப்பட்டும்** *இருக்கிறேன்' என்கிறார். இங்கே ஆண்டவர் தமது பிள்ளைகளை அறிந்திருக்கிறார். அவரது ஜனமும் அவரை அறிந்திருக்கிறார்கள்! இதுவே இரு பக்கமும் காணப்படும் அறிவு! நாம் அவரை அறிந்திருக்கிறோம்; அவரும் நம்மை அறிந்திருக்கிறார். இது அவருக்கும் நமக்குமுள்ள அன்பின் ஐக்கியமாயிருக்கிறது. அனுபவ அறிவிலிருந்து அன்பும், அன்பிலிருந்து ஐக்கியமும், ஐக்கியத்திலிருந்து கிறிஸ்துவின் சாயலும் உண்டாகிறது! இப்படிப்பட்டவர்களைப் பார்த்து: "நான் ஒருக்காலும் உங்களை அறியேன்" என்று ஆண்டவர் சொல்லவே மாட்டார்! "தம்முடைய குமாரனும், நம்முடைய கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவுடனேகூட ஐக்கியமாயிருக்கும்படி நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" (1கொரி.1:9). இந்த அனுபவ உண்மையை தூக்கியெறிந்து விட்டால், உங்கள் வேத அறிவு 'ஒரு தலை' பக்கமாய் மாறும் என்பதை, இன்றைய கிறிஸ்தவர்கள், எச்சரிக்கையாய் எடுத்துக்கொள்வது நல்லது!*

*– பரமானந்தம் ஐயர்*

---

## 'தெய்வ அன்பை' மறுக்கும், மானிட அன்பு!

***நா****ன் எழுதும் வார்த்தைகள் எனக்கே பிரியமில்லைதான்! ஆகிலும், இந்த வார்த்தைகள் என் மனதில் பாரமாயிருப்பதால், தேவனுடைய மக்களுக்கு 'அதை' மறைக்காமல் எச்சரிப்பது, என்மேல் விழுந்த கடமையாய் எண்ணுகிறேன்!*

*நாம் ஜெபிக்கிறோம், பாடுகிறோம், நம்முடைய ஜெபங்களிலும் பாட்டுகளிலும், நாம் முக்கியமாய் விரும்பிக் கேட்பது அன்பு! அப்படியிருந்தபோதிலும் "***திவ்விய அன்பைப் பெறாமல்***" இழந்து போய் சாதாரண* **மனுஷீக அன்பில்** *நாம் திருப்தியாயிருக்கக்கூடும். சாதாரண இந்த உலக அல்லது மானிட அன்பை திவ்வியமான அன்பென்று சொல்ல முடியாது!*

*நாம் ஒரு காரியத்துக்காக ஜெபிக்கும் போது, அவர் சமூகத்தில்*

*காத்திருந்து "என் பிள்ளையே உன் ஜெபத்தைக் கேட்டேன்" என்று அவர் சொல்லும் சத்தத்தை நமக்குள் கேட்குமட்டும்..... அமைதலாய் காத்திராமல், அடிக்கடி அடுத்த காரியத்துக்காக வரிசையாய் ஜெபித்துவிட்டு, 'ஜெபத்தை கர்த்தர் கேட்டார்' என எண்ணுவது திவ்விய அன்பின் ஆதாரம் இல்லை! நாம் திவ்விய அன்புக்காக ஜெபிக்கும்போது, திவ்விய அன்புக்கு நமது இருதயத்தைத் திறந்து வைத்து "அவர் சமூகத்தில் அமைதலாய் காத்திருப்பதே" அந்த வழி!*

*மெய்யான திவ்விய அன்பைக் குறித்து நமது கர்த்தருடைய திருவாய் மொழிகளையும், அவரை நெருங்கிப் பின்பற்றின அவரது தாசர்கள் பேசி அல்லது எழுதும்படி பரிசுத்த ஆவியானவர் கொடுத்த அக்கினிமயமான வார்த்தைகளையும் ..... நாம் எவ்வளவுக்கதிகமாய் சிந்தனையில் வைத்து தியானிக்கிறோமோ, அவ்வளவுக்கதிகமாய், 'நாம் சாவுக்கேதுவான கேடான நிலைமையிலிருக்கிறோம்!' என்பதை நாம் திட்டவட்டமாய் அறிந்து கொள்ள உதவுவதே "தெய்வ அன்பு!" தூய பரிசுத்த ஆவியானவருடைய 'பேரொளி' மாத்திரமே நம்மை நமக்கு வெட்ட வெளிச்சமாய் காட்டிட முடியும்! சகல பொறுமையும் பொருந்திய தேவனென்றழைக்கப்படுகிற சர்வ வல்லவர், நம்மிடத்தில் சும்மா 'வெறுமனே' எப்படிப் பொறுமையாயிருக்க முடியும்?*

**ஆம், ஒருவன் தேவனுடைய சமூகத்தில் யோபுவைப்போல தன்னை தாழ்த்தி, தன்னைத்தானே சோதித்து, ஆவியானவரின் உணர்த்துதலுக்கு மனஸ்தாபப்பட்டு, தூசியிலும் சாம்பலிலும் அமர்ந்து மனந்திரும்புவ தல்லவோ, தெய்வ அன்பு! இதைத் தவிர வேறு எதுவும் மனுஷீக 'போலி அன்பே'யாகும்!**

*இந்த ஆச்சரியமான மனந்திரும்புதல், நமக்குள்ளிருக்கும் மகிழ்ச்சியைக் குலைக்கும்படி, அவர்கள் மீது திருப்பி வைக்கப்பட்ட நிகழ்வாகவே அனேகர் எண்ணி, வீழ்ச்சியடைகிறார்கள்! ஆனால் உண்மையில், நம் மனந்திரும்புதல்.... தூசியிலும், சாம்பலிலுமிருந்து* **நம்மை எழுந்திருக்கவே** *வகை செய்கிறது! தன்னயத்திலும், அது சிக்குண்டிருக்கும் தீமையான வலைகளிலும், அதினுடைய தந்திரமான பாவ உபாயங்களிலும், பொல்லாத மாயங்களிலும், பொய்யை மெய்போல் காட்டும் மாய்மாலங்களிலிருந்தும் விடுதலை பெற்று 'புடமிடப்பட' நமக்கு ஆசையிருந்தால் மாத்திரமே, தேவனுடைய "அன்பின் செயல்" நம்மில் கிரியை நடப்பிக்க முடியும்!*

*தேவனுடைய இந்த அன்பின் செயலை, வெறுப்பவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் வீழ்ச்சியடையும் படுகுழி 'மனுஷீக அன்பு' என்பதை அறிவார்களாக!*

*– ஏமி கார்மைக்கேல்*



## பர்தொலொமேயு அப்போஸ்தலன்,

சிலுவையில் உயிருடன் தோல் உரிக்கப்பட்ட சீஷன்!

(AD 70)

இயேசு கிறிஸ்துவின் மெய் சீஷனாய் விளங்கிய இவர், தொடர்ந்து 37 - ஆண்டுகள் கிறிஸ்துவை பிரசங்கித்தார். இன்றைய துருக்கி தேசத்திலிருந்து ஈரான் தேசம் வரை உள்ள அர்மீனியாவின் 12 நகரங்களில் கிறிஸ்துவை பிரசங்கித்து "விக்கிரகாராதனையிலிருந்து மனந்திரும்பி இரட்சகர் இயேசுவிடம் வரும்படி" திரளான ஜனங்களை இரட்சிப்பிற்குள் நடத்தினார். அவ்வாறு நடத்தப்பட்டவர்களில், அந்த அர்மீனியா நாட்டு ராஜாவின் சகோதரனும் அவனுடைய குடும்பமும் அடங்குவர்.

கைது செய்யப்பட்டு அர்மீனியா ராஜாவிற்கு முன்பாக நின்றபோது "நீதானே, எங்கள் தேவர்களை மக்கள் ஆராதிப்பதிலிருந்து வழிவிலகச் செய்து சீரழித்தாய்! அது மாத்திரமல்ல, என் சொந்த சகோதரனையே மனம் மாறச் செய்த துரோகி!" என கோபமுடன் பொறிந்து கூறினான்.

அதற்கு பர்தொலொமேயு மிகுந்த தைரியத்தோடு "உங்கள் தேசத்தில் மெய்யான தெய்வ ஆராதனையை மாத்திரமே நான் பிரசங்கித்தேன். நான் உங்கள் சகோதரனையோ அல்லது அவர் குடும்பத்தையோ மாற்றவில்லை! **அவர்களாகவே சத்தியத்திற்குள் வரும்படி அழைத்தேன்!**" என கூறினார். மேலும் "அஸ்தியாகஸ் ராஜா அவர்களே, உங்களின் ஆணைப்படி, நான் ஒருபோதும் உங்கள் விக்கிரகங்களுக்கு பலியிட மாட்டேன். அதற்கு பதிலாக என்னுடைய உத்தமமான சாட்சியை, என் இரத்தத்தினால் முத்திரை பதிக்கவே விரும்புகிறேன்" என அறிக்கைச் செய்தார்.

அதைக் கேட்டு ஆத்திரமடைந்த ராஜா "இவன் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டியவன். இவனை முதலாவது கொடிய இரும்பு தடிகளால் அடியுங்கள். அதன் பின்பு ஒரு சிலுவையில் தலைகீழாக இவனை தொங்கவிடுங்கள்..... பின்பு உயிரோடு அவன் தோலை உரித்து எடுங்கள்!" என கட்டளையிட்டான். அவ்வாறாகவே பர்தொலொமேயு அடிக்கப்பட்டு, தலைகீழாய் சிலுவையில் அறையப்பட்டு, **உயிருடன் தோல் உரிக்கப்பட்டார்**. அந்த நிலையிலும் அவர் தொடர்ச்சியாக சூழ நின்ற ஜனங்களைப் பார்த்து "இயேசுவை விசுவாசியுங்கள்! மெய்யான தேவனை ஆராதனை செய்யுங்கள்!" என கூறிக் கொண்டேயிருந்தார். முடிவாக, அவருடைய விசுவாச முழக்கத்தை நிறுத்தும்படியாக ராஜாவின் வீரர்கள் ஒரு பெரிய கோடாரியை வைத்து பர்தொலொமேயுவின் தலையை வெட்டினார்கள்! அந்த நிமிடமே, பர்தொலொமேயு தன் ஆண்டவராகிய இயேசுவிடம் கரம்கோர்த்து இணைந்தார்!!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## பாவ வாழ்வின் மனசாட்சி, ஒருவனை ‘வாதித்து’ கொன்றுவிடும்!

சிக்காகோ நகரின் குருவானவர் ஹைட் அவர்களிடம் ஒரு பெண்மணி தன் சோக வாழ்வை கூறினாள்:

“அட்லாண்டிக் மகா சமுத்திரத்திற்கு அப்பாலுள்ள பழைய நாட்டுப்புறத்தில், பதினான்கு ஆண்டு காலத்திற்கு முன்னர், நான் ஒரு மனிதனைக் கொன்றுவிட்டேன். கானகத்தின் கரிய இருளில், நான் ஒரு குத்துவாளை அந்த மனிதனின் குரல்வளையை ஊடுருவக் குத்தி, அந்த கானகத்தில் அவன் இரத்த வெள்ளத்தில் செத்துவிட்டான். அம்மனிதன் தானாகவே தற்கொலை செய்து கொண்டு மடிந்து போனான் என்று அனைவரும் எண்ணிக்கொண்டார்கள்.

இறுதியாக, நான் அமெரிக்காவிற்குச் சென்று சமாதானத்தைக் கண்டு கொள்ளலாம் என்ற நோக்கத்தில் வந்துசேர்ந்தேன். முதலாவது நான் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் பட்டணத்திற்கும், பின்னர் சிக்காகோ நகருக்கும் சென்றேன். 12 ஆண்டுகளாக நான் இந்நாட்டில் இருந்துவருகின்றேன். ஆனால் தேவ சமாதானத்தை நான் கண்டு கொள்ளவே இல்லை” என கூறி கண்ணீர் வடித்தார்கள்!

மனித இரத்தத்தைத் தன் கரங்களில் வடியவிட்ட அந்த ஸ்திரீயை அவள் மனசாட்சி வாதித்து வேதனைப்படுத்தியது உண்மைதான். பெரிய பாவமோ அல்லது சின்ன பாவமோ, பாவம் பாவமேதான். அந்தப் பாவ மனசாட்சி உன்னையும் அழுத்திக்கொண்டிருக்கின்றதல்லவா?

“என்னுடைய மனசாட்சி என்னைத் தொல்லைப்படுத்தவில்லை, நான் நிம்மதியாக இருக்கின்றேன்” என்று நீங்கள் ஒருக்கால் சொல்லக்கூடும். அதை நான் ஒத்துக் கொள்ளுகின்றேன். மனசாட்சி சில சமயங்களில் உறக்க நிலையிலிருக்கலாமே தவிர, அது ஒருபோதும் செத்துப்போவதில்லை! ஒரு நாள் வரும், அப்பொழுது ஆழ்ந்த தூக்கத்திலிருக்கும் உங்கள் மனசாட்சி கண்விழித்து, நீ ஒரு குற்றவாளி என்று உனக்கெதிராகத் தன்னுடைய விரலை நீட்டிக் காண்பிக்கும். தூங்கிக் கொண்டிருக்கும் மனசாட்சி தனது தூக்க நிலையிலிருந்து விழிக்கும் மனிதனுக்கு ஐயோ! அந்தோ, அவன் தனது மனசாட்சிக்குத் தப்பி ஒளித்துக் கொள்ளவே முடியாது.

ஓ வாலிபனே, விழித்துக்கொள்! கொடிய மனசாட்சியின் தூக்கம், உன்னை மூடிக் கொள்ளாதபடி, இன்றே உன் இரட்சகரிடம் திரும்பி, உன் ஆத்துமா மீட்கப்படுவதாக!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.